1982 மார்ச் 20]

துவக்கியிருக்கிறார்கள் என்றால், நோயாளிகளுக்குப் பயன்பட வேண்டுமென்பது ஒன்று. இரண்டாவதாக, போஸ்ட் கிராஜுவேட்ஸ், இதில் மேற்பட்டப் படிப்பு படிப்பதற்காக, மற்றும் டி.எம்., அதாவது, அப்பர் கிராஜீவேட்ஸ் மாணவர்கள் படிப்பதற்காகப் பயன்படுகிறது. ஆகவே, எம்.பி.பி.எஸ்., மாணவர்களுக்கு காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் தேவையில்லை. அவர்களுக்கு என்ன தேவை என்றால், அந்த வியாதி வரக்கூடிய நேரத்தில், அதற்கு, என்ன, என்ன சிகிச்சை செய்வது, என்பது தான். சாதாரண அன்டர்கிராஜுவேட் படிப்புக்கு அது போதும். அது இப்பொழுது மதுரை மெடிகல் காலேஜிலே நல்லவகையிலே கிடைக்கிறது. 75 சத விகிதம், காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் இல்லாமல், சாதாரண மருத்துவ மனைப் படுக்கைகளிலே மெடிக்கல் வார்டுகளிலே கவனிக்கக் கூடியதாக இருக்கிறது. அதைக் கவனிக்கக்கூடிய தகுதி பெற்ற டாக்டர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இதிலே, எம்.பி.பி.எஸ். மாணவர்களைப் பொறுத்தவரையில், எந்தப் பிரச்னையும் எழவில்லை. இங்கே, மெட்ராஸ் மெடிக்கல் காலேஜிலே என்ன படிப்பு சொல்லப்படுகிறதோ, அதே அளவு கல்வி, அதே தரமான படிப்பு அங்கேயும் சொல்லித் தரப்படுகிறது.

காஞ்சிபுரத்தில் தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளில் வேலை செய்து வந்தவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் :

* **வினா எண். — 577 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

காஞ்சிபுரத்தில் S.L.N.S. சர்வீஸ், சஞ்சீவி பஸ் சர்வீஸ் போன்ற தேசிய மயமாக்கப்பட்ட பேருந்துகளில் வேலை செய்து வந்த தொழிலாளர்களுக்கு அரசு பேருந்துகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : வேண்டிய நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே எடுத்துள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கும்போது தனியார் பேருந்துகளில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் இன்றுவரை மாற்று வேலை பெறமுடியாமல் இருப்பதாக அறிகிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முனையுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளிலே யார்,யார் வேலை செய்தார்கள் என்பதை அந்தந்த மாவட்டப் போக்குவரத்து அதிகாரிகள் பரிந்துரை செய்ததன் பேரில் இங்கே நாம் வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இன்னும் கொடுக்கப்படவில்லை யென்று யாராவது சொல்வார்களே யானால் அந்த தகுதியை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளின் முதலாளிகள் பல தொழிலாளர்களைச் சட்டத்திற்குட்பட்ட முறையில் பதிவு செய்யாமல் தற்காலிகமாக, 10, 15 ஆண்டுகள் வேலை வாங்கியிருக்கிறார்கள். அது போன்ற தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புத் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படி தனியார் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கும் போது அவர்கள் சரியான முறையிலே பதிவு செய்யாமல் இருந்திருப்பார்களேயானால் இப்பொழுது நாம் அவர்களை எடுத்துக் கொள்வது என்பது கொஞ்சம் சிரமமான காரியம். அப்பொழுதே அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்து அந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்க வேண்டும். இப்பொழுது இளைஞர்கள் நிறைய பேர் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில், இவர்களை எடுத்துக் கொள்வது என்பது கொஞ்சம் யோசனைக் குரியதாகத் தானிருக்கிறது. இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையிலே அரசாங்கம் சிந்திக்கும்.

கிராமப்புற வழித்தடங்களில் மினி பஸ்களை விடும் திட்டம் :

வினா எண். 578—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற வழித்தடங்களில் 'மினி பஸ்கள்' விடும் திட்டம் எப்போது துவக்கப்படும்?

(ஆ) முதன் முறையாக எத்தனை மினி பஸ்கள் விட திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1978-ஆம் ஆண்டிலிருந்தே கிராமப்புற வழித்தடங்களில் மினி பஸ்கள் விடும் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இது வரையில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 66 வழித்தடங்களில் 70 மினி பஸ்கள் விடப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS